நடவடிக்கை எடுக்கப்படும். எனவே வறட்சி நிவாரணப் பணி களின்கீழ் பாதி மானியம், பாதி கடன் என்று கொடுக்கப்பட்ட தால் அவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவியாக இருக்க வேண்டும்.

நாராவாரிக்குப்பம் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர்வழங்கும் திட்டம்.

326—(*வினா 19279)—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்குன்றம்—நாராவாரிக்குப்பம் பேரூராட்சிக்கென நிரந்தரக் குடிநீர்த்திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ): செங்குன்றம்—நாராவாரிக்குப்பம் பேரூராட்சிக்குத் தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

மேலப்பாளையம் நகராட்சிப்பகுதிக்குக் குடி நீர் வழங்கும் திட்டம்.

327—(*வினா 19819)—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலப்பாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டத்திற் கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) இத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ரூ. 142.20 இலட்சங்கள்.

(ஆ) இத்திட்டத்தின் வேலைகள் இப்பொழுது நடைபெற்று கொண்டிருக்கின்றன.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, நெல்லை பேரூராட்சி இப்போது மாநகராட்சியாக மாறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தத் திட்டம் இப்போது நடைபெற்றுக்கொண் டிருக்கிறது என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த தகவல் பிரகாரம் இந்தத் திட்டம் இன்னும் துவங்கப்படவேயில்லை. எப்போது முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா?